# News Release

VAUGHAN

# வாகன் கலாச்சாரத் தின தொடக்க நிகழ்வில் கலை, கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தைக் கொண்டாடியது!

**வாகன், ஒன்ராறியோ (செப்டம்பர் 20, 2025)** – செப்டம்பர் 20, சனிக்கிழமை அன்று, வாகன் நகர மேயர் ஸ்டீவன் டெல் டுகா மற்றும் கவுன்சில் உறுப்பினர்களுடன், சமூக உறுப்பினர்கள் கார்வில் சமூக மையத்தில் நடைபெற்ற வாகன் கலாச்சாரத் தின தொடக்க நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வு கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தைச் சிறப்பித்துக் கொண்டாடியது. விழாவில் மேயர் டெல் டுகாவின் வாழ்த்துரை, இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள், கலை மற்றும் கலாச்சாரப் பணிமனைகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

“வாகன் கலாச்சாரத் தின தொடக்க நிகழ்ச்சிக்காக, நமது நகரின் புதிய, நவீன வசதிகளுடன் கூடிய கார்வில் சமூக மையத்தில், அனைத்து வயதினரையும் சேர்ந்த குடிமக்களுடன் பங்கேற்றதில் நான் மகிழ்ச்சி அடைந்தேன்,” என்று மேயர் ஸ்டீவன் டெல் டுகா தெரிவித்தார். “நமது நகரின் சிறப்புமிக்கக் கலை மற்றும் கலாச்சாரச் சூழலைக் கொண்டாடிய இந்த நிகழ்வு உண்மையிலேயே ஒரு சிறப்புத் தருணமாக இருந்தது – வாகன் பல ஆண்டுகளாகப் பெருமையுடன் ஆதரித்து வந்த ஒரு பாரம்பரியம். இசை, நடன நிகழ்ச்சிகள், பல்வேறு செயல்பாடுகள் மற்றும் பல பொழுதுபோக்கு அம்சங்களுடன் ஆனந்தமிகு நாளை கொண்டாட வந்த அனைவருக்கும் நன்றி. ஆனால் மகிழ்ச்சி இப்போதுதான் தொடங்குகிறது! இப்போதிருந்து வரும் அக்டோபர் 12, ஞாயிற்றுக்கிழமை வரை, நகமும் சமூகமும் இணைந்து நடத்தும் 60-க்கும் மேற்பட்ட கலாச்சாரத் தின நிகழ்வுகளில் கலந்துகொள்ளுங்கள். இந்நிகழ்வுகள், எங்கள் நகர மக்களின் பல்வேறு பாரம்பரியங்களையும் மரபுகளையும் பிரதிபலிக்கின்றன. இது தவறவிடக்கூடாத ஒரு அனுபவம்!”

வரும் அக்டோபர் 12, ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் 60 நிகழ்வுகள் குறித்து மேலும் அறிய, வாகன் நகரத்தின் வாகன் கலாச்சாரத் தினங்கள் வலைப்பக்கத்தைப் பாருங்கள்.

# News Release

புதுப்பிப்புகள் மற்றும் நிகழ்நேரச் செய்திகளுக்காக Vaughan News-ஐ சந்தா செய்யவும், மேலும் அதிகாரப்பூர்வ நிறுவனச் சேனல்களை X, Facebook, Instagram மற்றும் LinkedIn-இல் பின்தொடரவும்.

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca